# முதல்வர் மு.க.ஸ்டாலின் - தமிழ்நாட்டின் இரும்பு மனிதராக விளங்குகிறார்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர் பன்னாட்டு அரங்கம் என்பது 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.525 கோடி மதிப்பீட்டில் 5 இலட்சம் சதுரடி பரப்பளவில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**கலைஞர் பன்னாட்டு அரங்கம்!**

முதலமைச்சர் அவர்களின் தேதியைப் பெற்று, அதற்கு அடிக்கல் நாட்டுவதற்கு துறை முறையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. வள்ளுவர் கோட்டம் என்று சொன்னாலே சில நபர்களுக்கு கசக்கும். வள்ளுவர் கோட்டம் என்பது அரசின் நிதியில் தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்துப்பார்த்து கட்டிய கட்டடம் அந்த வள்ளுவர் கோட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஏறத்தாழ 10 ஆண்டுகாலம் சீரமைப்பின்றி இருந்தது. முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன் ஒன்று சொன்னார்கள். ஏதோ அரசு நிகழ்ச்சியை நடத்துவது என்ற நிலையை மாற்ற வேண்டும். பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கும் அதைக் கொண்டுவர வேண்டும். என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும், திருமண நிகழ்ச்சியாக இருந்தாலும், பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அதைப் பயன்படுத்த வேண்டும். குடும்பத்தோடு அங்கே போக வேண்டும். அங்கு உணவுக்கூடம் அமைக்க வேண்டும். அங்கே பூங்காக்கள் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தத் துறைக்கு ரூ.80 கோடி பணம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது 100 சதவிகிதம் முடிவுற்றநிலையில் இருக்கிறது. விரைவிலே பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் மூலமாக கொண்டுவரப்படும்.

**கொதிகலன்கள் இயக்குநரகம்!**

இந்த நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரைக்கும் கொதிகலன்கள் என்ற ஓர் இயக்குநரகம் இருக்கிறது. எங்கெல்லாம் Factory இருக்கிறதோ அந்த Factory இருக்கிற Boilerஐ check செய்வது, renewal செய்வது போன்ற பணிகள் அந்தத் துறைக்கு உண்டு. 1923ன்படி கொதிகலன் இயக்குநர்களால் உறுதி செய்யப்பட்ட சட்டம் வருகிறது. இந்தத் துணை இயக்குநர் 465 சதுர மீட்டருக்குமேல் வெப்பமூட்டும் மேற்பரப்பு கொண்ட கொதிகலன்களை ஆய்வு செய்வதும், நான்கு ஆண்டுகளில் 2017 கொதிகலன்களுக்கு உற்பத்தி நிலை தரச் சான்றிதழ் 22,257 கொதிகலன்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு, அதன்மூலமாக நான்கு ஆண்டுகளில் இதுவரைக்கும் ரூ.29 கோடியே 56 இலட்சம் ஆய்வுக் கட்டணம் இந்தத் துறைக்கு வந்திருக்கிறது என்பதையும் இந்தநேரத்தில் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

பொருநை அருங்காட்சியகம்; அருங்காட்சியகம் கட்டுகிற பணியும் பொதுப் பணித் துறைக்குத்தான் உண்டு. இன்றைக்கு கீழடியில் கட்டப்பட்ட அருங்காட்சியகம் பலரும் ஏன் வெளிநாட்டவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். கீழடி அருங்காட்சியகம் நிர்மாணத்திற்குப் பின்னால் இப்போது தூத்துக்குடி மாவட்டம் சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட புதை பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டி மலைக்கருகில் 13 ஏக்கர் நிலத்தில் ரூ.33 கோடி மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருகிறது.

சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை Accelerator Mass Spectrometry ஆய்வு செய்ய Americaல் இருக்கிற Floridaல் உள்ள Beta Analytic Laboratory சோதனைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டது. ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இரும்பால் செய்யப்பட்ட வாள், கத்தி போன்ற பொருட்களை 5,300 ஆண்டு காலத்திற்கு முற்பட்ட காலம் என்று ஆய்வாளர்கள் அதைத்தான் சொன்னார்கள். இந்தியாவிலும் அதைத்தான் சொன்னார்கள். அமெரிக்காவிலும் அதைத்தான் சொன்னார்கள். 5,300 ஆண்டுகாலம் முற்பட்டது என்று சொன்னார்கள். இந்திய வரலாற்றின் இரும்புக் காலம் தமிழர்களின் காலம் இனி தமிழ்நாட்டிலிருந்துதான் எழுதப்பட வேண்டுமென்று 2312025 அன்று முதலமைச்சர் அவர்கள் ஓர் அரசு நிகழ்ச்சியில் வெளிப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகளை என்றவுடனேயே எனக்கு Soviet Union னுடைய அதிபர் Joseph Stalin எனக்கு நினைவிற்கு வந்தார். Joseph Stalin ஒன்றைச் சொன்னார். ஒரு நாட்டினுடைய அடையாளம் மொழி; மொழியினுடைய அடையாளம் பண்பாடு; மொழியையும், பண்பாட்டையும் காக்க வேண்டியது தலையாய கடமை என்று சொன்னவர் Joseph Stalin; அதனால் அந்த நாட்டு மக்கள் அவரை இரும்பு மனிதர், இரும்பு மனிதர் என்று அழைத்தார்கள். இரும்பு மனிதர் என்று மொழியையும், பண்பாட்டையும் காப்பது தலையாயக் கடமை; அதனால் அந்த நாட்டு மக்கள் Joseph Stalinஐ இரும்பு மனிதர் என்று சொன்னார்கள்.

**திராவிடத் தமிழ்!**

திராவிடத் தமிழ் சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ் தோன்றியது என்று சொன்ன காலத்தில், தமிழ் மொழி தான் பழைமையான திராவிட மொழி என்று ஆய்வு செய்து, ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல் என்கிற ஒரு வெளிநாட்டுப் பாதிரியார். தமிழ் மொழி என்பது செம்மொழி, பழமையான மொழி என்று சொன்னவர் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞர். திராவிடர்களின் மொழி தமிழ்தான் என்று, தனித் தமிழ் இயக்கம் கண்டவர் மறைமலை அடிகளார், கி.ஆ.பெ. விஸ்வநாதம், திரு.வி.க., தந்தை பெரியார், மு.வரதராசன், தமிழ்அண்ணல் போன்ற எண்ணற்ற பெருமக்களெல்லாம் தமிழ் மொழி திராவிட மொழி என்று சொன்னவர்கள்.

தமிழ் சினிமாவில், நாம் பழைய சினிமாவை பார்த்தோம் என்று சொன்னால், அதில் நமஸ்காரம், ஸ்வாமி, பிராணநாதா, ஷேமம் என்ற இந்த வார்த்தைகள்தான் பழைய படங்களில் வசனங்கள் எல்லாம் இப்படித்தான் இருக்கும். இவைகளெல்லாம் சமஸ்கிருதம் கலந்த வசனங்களாகவேதான் இருந்தது. கணவன்! மனைவி! சுகம்! நன்றி! வணக்கம்! என்ற இந்த தூய திராவிட தமிழை ஊட்டி வளர்த்தார்கள் பேரறிஞர் அண்ணாவும், என் அண்ணன் கலைஞரும்தான் அதற்கு காரணமாக இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் தமிழை திரைப்பட உலகத்தில் புகுத்தியவர்கள்.

**திராவிடத் தமிழுக்கு சமஸ்கிருதத்தால் ஆபத்து!**

கவிதைத் தமிழை பாவேந்தரும், காவியத் தமிழை புலவர் குழந்தையும், நாடகத் தமிழை - பேரறிஞர் அண்ணாவும், திரைத் தமிழை - என் அண்ணன் கலைஞரும், உரைநடைத் தமிழை அப்பாதுரையும், கதைத் தமிழைத் தத்துவமேதை டி.கே.சீனிவாசன் போன்றவர்ளும் வளர்த்தார்கள். இப்படி வளர்க்கப்பட்ட திராவிடத் தமிழுக்கு இன்றைக்கு ஆபத்து வந்திருக்கிறது. திருக்கோயில்களில் ஆன்மீகத் தமிழ்

**தங்கத் தமிழால் தனையாண்ட**
**பொங்கு உலக பூரணனை**
**அன்பின் பொலிவு என்று காட்டினான்**

என்று வைணவ கோயில்களிலே திவ்ய பிரபந்தம் பாடிய திருமங்கையாழ்வார் அவர்களுடைய பாசுரங்கள். வைணவக் கோயில்களிலே பாடப்படுகிறது.

**பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்!**
**பழத்தினிற் சுவை ஒப்பாய்!**
**கண்ணிடை மணி ஒப்பாய்!**
**கருவிருள் சுடர் ஒப்பாய்!**
**விண்ணிடைக் குருகாவூர்**
**வெள்ளிடை நீயன்றோ!**

என்று சைவ குரவர்களில் நான்கு பேரில் ஒருவராக இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்தப் பாடலை சைவ திருக்கோயில்களிலே அது பாடப்படுகிறது.

**"இரவு பகல் பலகாலும் இயலிசை முத்தமிழ் கூறி"**
**அம்புவி தனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தி உனை**
**அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே**

என்று எங்கள் ஊரில் பிறந்த அருணகிரிநாதர் திருப்புகழைப் அப்படித்தான் பாடுகிறார்.

**மூவர் நாயகன் என மறை**
**வாழ்த்திடும் முத்தியின் வித்தே,**
**அமுதே, பெருங்கருணைக்**
**கடலே, கனியே, கரும்பே, நல்**
**சேணோர் தணிகை மலை மருந்தே**
**தேனே, ஞானச் செழுஞ்சுடரே.**

என்று திருத்தணியில் இருக்கிற முருகனைப் பார்த்து வள்ளல் பெருமான் அவர்கள் இப்படித்தான் பாடுகிறார். இதை, ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தருமந்திரத்தில் இருக்கிற திருமூலர் என்ன சொல்கிறார் தெரியுமா?

**"என்னை நன்றாக இறைவன்**
**படைத்தனன்!**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"**

என்னைப் படைத்ததே தமிழ் செய்வதற்காகத் தான் என்று திருமந்திரத்தில் திருமூலர் சொல்கிறார்.

**ஆன்மீகத் தமிழ்!**

இப்படி ஆன்மீகத் தமிழ், ஒரு பக்கத்தில் திராவிடத் தமிழ், இந்த இரண்டு தமிழ்க்கும் இன்றைக்கு வைணவக் கோயில்களிலும், திருக்கோயிகளிலும், பாடிக் கொண்டிருக்கிற இந்த வளர்க்கப்பட்ட இந்தப் பக்தி இலக்கியத்திற்கு ஆன்மீகத் தமிழுக்கு இப்போது இந்தித் திணிப்பு என்ற பெயரில் சமஸ்கிருதம்மூலம் வருங்காலத்தில் அழிவு நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆபத்துகளை எண்ணும்போது, எனக்கு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் 'அரசிளங்குமரி' என்கிற திரைப்படத்தில், 65 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய ஒரு தத்துவப் பாடல் தான் எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்த 1961 ஆம் ஆண்டு 65 வருடத்திற்கு முன்னால், அது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாடல். அந்தப் பாடலை பாடியவர் டி.எம். சௌந்தரராஜன். அந்தப் பாடலுக்கு வாய் அசைத்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்தப் பாடல் அப்படித்தான் அமைந்திருக்கிறது. ஏன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இங்கே இருக்கின்ற முன்னால் இருக்கிறவர்கள், பின்னால் இருக்கிறவர்கள், நான் உட்பட, உங்களுக்குச் சொல்கிறேன். மக்கள் திலகத்தினுடைய முதல் ரசிகர் யார் என்று சொன்னால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிற என் அருமை அண்ணன்தான் மக்கள் திலகத்தின் முதல் ரசிகர். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் காரில் செல்கிறபோது நான், அண்ணன் நேரு போன்றவர்களெல்லாம் அவருடன் பயணம் செய்கிறோம். அப்போது பார்த்தீர்களென்றால் பழைய பாடல் எம்.ஜி.ஆர். பாடல் என்று சொல்லப்படுகிற பாடலைத்தான் அவர் எப்போதும் கேட்டுக்கொண்டிருப்பார். இன்னும் சொல்லப்போனால், அந்தக் காலத்தில் மக்கள் திலகம் அவருடைய திரைப்படம் வெளியாகிறது என்று சொன்னால், அவர் முதலில் யாரிடம் phone போட்டு பேசுவார் என்று கேட்டீர்களென்றால், எங்கள் முதலமைச்சர் அவர்களுக்குத்தான் phone போட்டு, படம் release ஆனது, படம் பார்த்தது எப்படி இருக்கிறது result என்ன என்று கேட்கிற முதல் குரல் அவராகத்தான் இருக்கும். அண்ணாவினுடைய பிறந்த நாள் விழாவை ஒருமுறை கோபாலபுரத்தில், அவரை வைத்துத்தான், அந்த பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார். அப்படி ஒரு நெருக்கும் அவருக்கு இன்றைக்கும் மனதில் இருக்கிறது. அதை நான் எப்படி ஒப்பிட்டுப் பார்க்கிறேன் என்று சொன்னால் அந்தப் படத்தில் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு பட்டுக்கோட்டை கல்யாணசுந்திரத்தின் பாடலை டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாட, அண்ணன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் வாய் அசைக்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் செல்கிறார். நான் போகும்போது பார்க்கிறேன். போகும் இடங்களில் எல்லாம் தாய்மார்கள் அனைவரும் அவர் கையில் ஒரு குழந்தையைக் கொடுத்து முத்தம் கொடுக்கச் சொல்கிறார்கள். கையில் கொடுக்கச் சொல்கிறார்கள், அதிர்ஷ்டம் என்று சொல்கிறார்கள். நான் என் வீட்டில் பார்த்தேன், அவர் கையில் தூக்குவதுபோல் ஒரு அருமையான படம் கிடைத்தது, முதலில் அந்தப் படத்தை பெரியதாகப் போட வேண்டுமென்று நினைத்து, என் வீட்டில் அதைத்தான் பெரியதாக மாட்டியிருக்கிறேன். எதற்கு நான் சொல்கிறேன் என்றால், அரசிளங்குமரியில் குழந்தையை தூக்கிப் பிடித்துப் பார்த்த அந்த நினைவு, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குழந்தையைப் பார்க்கிற போது அந்தப் பாட்டுதான் என் நினைவுக்கு வந்தது. என்னவென்றால்,

**சின்னப்பயலே சின்னப்பயலே**
**சேதி கேளடா,**
**நான் சொல்லப்போற வார்த்தையை நல்லா**
**எண்ணிப் பாரடாநீ**
**எண்ணிப் பாரடா,**
**ஆளும் வளரணும் அறிவும் வளரணும்**
**அதுதாண்டா வளர்ச்சி** (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள், ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள், திராவிட மாடல் ஆட்சி என்று சொன்னால், எனக்கு இரண்டு கண்கள்ஒன்று Health மக்கள் நல்வாழ்வு, மற்றொன்று கல்வித் துறை, இவை இரண்டும்தான் என் கண்கள் என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளும் வளரணும் என்று சொன்னால் Health Department இருந்தால்தான் ஆள் சுகமாக வளர முடியும். அறிவு பெருக்க வேண்டுமென்று சொன்னால் கல்வி சிறப்பாக இருந்தால்தான் அறிவைப் பெருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் சொல்கிறார்.

**ஆளும் வளரணும் அறிவும் வளரணும்**
**அதுதாண்டா வளர்ச்சி,**
**ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவேநீ**
**தரும் மகிழ்ச்சி,**
**நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்**
**காலம் தரும் பயிற்சிஉன்**
**நரம்போடுதான் பின்னி வளரணும்**
**தன்மான உணர்ச்சி உன்**
**நரம்போடுதான் பின்னி வளரணும்**
**தன்மான உணர்ச்சி, தன்மான உணர்ச்சி**

(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**முதல்வரின் தன்மான உணர்ச்சி**

முதலமைச்சர் அவர்களுக்கு இந்த தன்மான உணர்ச்சி, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு தன்மான உணர்ச்சி என்று பீறிடுகிற காரணத்தினால் தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்மிகத் தமிழுக்கும், திராவிடர் தமிழுக்கும் ஊறு ஏற்பட்டால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன். எத்தனை கோடி இழந்தாலும் பரவாயில்லை, என்ன விலை தர வேண்டுமென்றாலும் பரவாயில்லை, அதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சூளுரைத்து தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருமொழிக் கொள்கைதான் என் ஆட்சியின் கொள்கை என்று இன்றைக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நான் இன்றைக்கு யோசித்துப் பார்க்கிறேன், மொழியையும், பண்பாட்டையும் காப்பாற்ற வேண்டியது ஆட்சியினுடைய கடமை என்று சொன்ன Joseph Stalinஐ ரஷ்ய மக்கள் இரும்பு மனிதர் என்று சொன்னார்கள். என் தாய்மொழியான தமிழை இங்கே காப்பாற்றுவதற்கு முதல் ஆளாக இன்று போர்க் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டினுடைய இரும்பு மனிதன், இரும்பு மனிதன், இரும்பு மனிதன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அத்தனை பேரும் போற்றிக் கொண்டாட வேண்டிய நிலையிலே இன்றைக்கு நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

**சமூக நீதியின் வெளிப்பாடாகக் கட்டப்படுகின்ற கட்டடங்கள்!**

அந்த வகையிலே காலமும், நேரமும் எனக்கு புரிகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒரு மணிக்கு உணவு இடைவேளைக்குப் போகாமல் காத்திருப்பது, எனக்கு மனதில் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், நான் நிறைவாக சில செய்திகளைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு காலத்திலே, ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொரு கட்டடங்கள் கட்டப்பட்டன. பல்லவர் கால கட்டடக் கலைக்கு அடையாளம் மாமல்லபுரம் கடற்கரை கோயில்தான், சோழர் கட்டடக் கலைக்கு அடையாளம் தஞ்சாவூர் பெருவுடையார் கோயில், பாண்டியர் கட்டடக் கலைக்கு அடையாளம் மதுரை மீனாட்சியம்மன் கோயில், சேரர்கால கட்டடக் கலைக்கு அடையாளம் பத்மநாபபுரம் அரண்மனை, நாயக்க மன்னர்கள் கட்டடக் கலைக்கு அடையாளம் திருமலைநாயக்கர் மஹால், முகலாயப் பேரரசர் கட்டடக் கலைக்கு அடையாளம் சென்னை ஹுமாயுன் மஹால், பிரிட்டிஷ் கட்டடக் கலைக்கு அடையாளம் சென்னை உயர்நீதிமன்றம், 2021 முதல் சமூகநீதியின் வெளிப்பாடாக கட்டப்படுகிற கட்டடம், 2021க்குப் பின்னால் சமூகநீதியின் வெளிப்பாடாகக் கட்டப்படுகிற கட்டடங்கள் மதுரையிலே கலைஞர் நூற்றாண்டு நூலகம், (மேசையைத் தட்டும் ஒலி) கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கொளத்தூரில் பெரியார் மருத்துவமனை, கீழடியில் அருங்காட்சியகம், சென்னையில் முதன்முதலாக தலித் என்ற அடிப்படையில், முதன்முதலாக அமைச்சரான எம்.சி. ராஜா மாணவர் விடுதி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனைத் தொடர்ந்து அலங்காநல்லூரில் தமிழனின் பண்பாட்டு அடையாளமாக இருக்கிற பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் என்கிற அரங்கம், ஜல்லிக்கட்டு, திருவாரூரில் தனியார் அறக்கட்டளை மூலமாகக் கட்டப்பட்ட கலைஞர் கோட்டம். உலகத் தமிழர் கண்டுகளிக்க கலைஞர் நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம்.

**ஸ்டாலின் கட்டடக் கலை!**

இவைகள் அனைத்தும், இவைகள் அனைத்தும், ஏனென்றால், ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் ஒவ்வொரு design இருக்கிறது. ஒவ்வொரு பொருளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், 2021க்கு பின்னால், இவைகள் அனைத்தும் இன்றைய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி Composite section, Shear walls, Posttensioning, முப்பரிமாணம் Holography, மெய்நிகர் Augmented Reality ஊடற்ற தொடரி 3D போல 7D train experience ஆகிய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டப்பட்ட கட்டடங்கள்தான் பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டடங்கள். இந்தக் கட்டடக் கலைக்கு 100 ஆண்டுகள் கழித்து என்ன சொல்வார்கள் என்றால், "ஸ்டாலின் கட்டட கலை, ஸ்டாலின் கட்டட கலை, ஸ்டாலின் கட்டட கலை" என்று (மேசையைத் தட்டும் ஒலி) பின்னால் வருகின்ற தமிழ் மக்கள் இப்படித்தான் பதிவு செய்வார்கள்.

இந்த ஆட்சியிலே 2021-2025லே மொத்த அறிவிப்புகள் 89. அரசாணை வெளியிடப்பட்டது 83, நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள் 50, நிறைவுறும் தருவாயில் உள்ளவை 9, நடைபெற்று வருபவை 24, இடப் பிரச்சினையால் அரசின் பரிசீலனையில் 3 இருக்கின்றன. இந்த அடிப்படையில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் தங்கமணி உரை நிகழ்த்துகிறபோது, ஒரு செய்தியைச் சொன்னார்கள். 11 மருத்துவக் கல்லூரிகளை நாங்கள் கட்டினோம் என்று அவர் குறிப்பிட்டார். 11 மருத்துவக் கல்லூரிகளுக்கு ஆணை பிறப்பித்தது நீங்கள்தான். அதிலொன்றும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், 11 மருத்துவக் கல்லூரிகளை முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், பிரதமர் அவர்கள் 12-1-2022 அன்று காணொலிக் காட்சியின் மூலமாகத் திறந்து வைத்தார்கள். ஆனால், என்ன நிலைமை என்றால், இந்த 11 மருத்துவக் கல்லூரிகளின் திட்ட மதிப்பீடு எவ்வளவு தெரியுமா? திட்ட மதிப்பீடு 4 ஆயிரத்து 55 கோடி ரூபாய். நீங்கள் ஆட்சியில் இருந்தபோது செலவு செய்யப்பட்ட பணம், ஏனென்றால் accountsல் கணக்கு இருக்கிறது. யார் வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம். நீங்கள் செலவு செய்த பணம் 1,706 கோடி ரூபாய். அதாவது 42 சதவிகிதம். முதலமைச்சர் அவர்கள் அனுமதித்த தன் அடிப்படையில், கழக ஆட்சியில் செலவு செய்யப்பட்டிருக்கும் தொகை 2,349 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 58 சதவிகிதம் பணம் இந்த ஆட்சியில்தான் செலவு செய்திருக்கிறோம். கணக்கு இருக்கிறது. நாங்களே திறந்தோம் என்று சொன்னார். இல்லை.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்கள் என்பதுதான் உண்மை. அதுதான் நாடறிந்த உண்மை. அதோடு மட்டுமல்ல, (குறுக்கீடு) யார் ஆட்சிக்கு வந்தாலும், எந்தத் திட்டத்தையும் பாதியிலேயே நிறுத்திட முடியாது. நல்ல உள்ளம் உள்ளவர்கள் தொடர்ந்துதான் செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த மருத்துவக் கல்லூரி விஷயத்தில் 42 பெரியதா, 58 பெரியதா என்று பார்த்தால் 58 தான் பெரியது. இதற்கு அதிகமான கவனமும், பணமும் கொடுத்தது கழக ஆட்சியில்தான் என்று சொல்வதற்காக வருகிறேனேயொழிய வேறொன்றுமல்ல.

அதைப்போல, நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையின் பணிகளிலே அயராது உழைத்து, மக்களின் பாராட்டை இந்த அரசு பெற்றிருக்கிறது என்றால், அதற்கு துறையின் சார்பாக சில ஆலோசனைகள் வழங்கியதிலே அரசு தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அதைப்போன்று, முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் இருக்கின்ற அத்தனை செயலாளர் பெருமக்கள், நெடுஞ்சாலைத் துறை செயலாளர் முனைவர் இரா. செல்வராஜ், பொதுப் பணித் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், தமிழ்நாடு கடல்சார் வாரிய துணைத் தலைவர் தி.ந. வெங்கடேஷ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்ட இயக்குநர் தெ. பாஸ்கரபாண்டியன், இவர்கள் மட்டுமல்லாமல், நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், துணைப் பொறியாளர் கள் இரு துறைகளில் இருக்கின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த பொறியாளர் பெருமக்கள், ஏனைய அரசு அலுவலர்கள், நிறைவாக, சாலை செப்பனிடுவதற்காக என்னோடு பணியாற்றிக்கொண்டிருக்கிற கடைக்கோடியிலே இருக்கின்ற சாலைப் பணியாளர்கள் ஆகிய இத்தனைப் பேருக்கும் துறையின் சார்பாக இந்த நேரத்திலே நன்றி நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக ஒரு வாசகம் உண்டு. பைபிளில் ஒரு வாசகம் சொல்லப்படுகிறது. 'நேசிக்கிறவர்களை நேசிக்கப்படுவார்கள்' இது பைபிள் வாசகம். குர்ஆனில் ஒரு வாசகம் இருக்கிறது. 'எல்லையற்ற அன்பு செய்வாய்' என்று ஒரு வாசகம் இருக்கிறது. 'மரம் தனக்காக பழுப்பதில்லை, ஆறு தனக்காக ஓடுவதில்லை, சான்றோர் தமக்காக வாழ்வதில்லை' என்பது குருநானக்கின் வாசகம்.

ஆக பைபிள் வாசகத்திற்கு ஒப்ப, குரான் வாசகத்திற்கு ஒப்ப அந்த வழியில்தான் தமிழுக்காகவும், தமிழர்களுக்காவும், தமிழ்நாட்டிற்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அந்த உழைப்பிற்கு கிடைக்கப்போகிற வெகுமானம் 200க்கு 200ம் அந்த வெகுமானம் கிடைக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் நெடுஞ்சாலைத் துறை சார்பாக 287 வெட்டுத் தீர்மானங்களையும், பொதுப் பணித் துறை சார்பாக 72 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். நான் நேரடியாக சிலவற்றை பதிலளித்திருக்கிறேன். பல வெட்டுத் தீர்மானங்களை நானே படித்துப் பார்த்திருக்கிறேன். வருங்காலங்களில் அரசினுடைய நிதிநிலைக்கேற்ப நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்துள்ள அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி உங்கள் அத்தனை பேரையும் கேட்டுக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒரு முறை வணக்கத்தையும், நன்றியையும் சொல்லி, உரையை நான் நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

## கடந்த ஆட்சியில் கட்டுமானப் பணி துவங்கப்பட்டு, கழக ஆட்சியில் பணிகள் முடிக்கப்பட்டு, 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஜனவரி 2022ல் திறக்கப்பட்டன!



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற 2025–2026 வரவு செலவு திட்ட அறிக்கை கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் ஓராண்டு சாதனை விளக்க கால பேழையினை வெளியிட்டார். இதில் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மண்டலத்தலைவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், நிதிக் குழு தலைவர் கு.கோமதி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை பெரிய பள்ளிவாசலில் இஸ்லாமிய சகோதர – சகோதரிகளுக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாநகர தி.மு.க. பொறுப்பாளர் வே. ராஜேஷ் ஆகியோர் இனிப்பு வழங்கி மாநகர தி.மு.க. சார்பில் ரமலான் வாழ்த்துத் தெரிவித்தனர். உடன் மாநகரத் துணைச் செயலாளர் ப.ரெங்கராஜன், மாமன்ற உறுப்பினர் சி.மதியழகன், வட்டச் செயலாளர்கள் கண்மணி சுப்பு, முருகேசன், ஆனந்த், செந்தில், செல்வம், கணேசன், சரத் மற்றும் ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.